# சிந்தனைக்கு சில நாயக மொழிகள்

## சிந்தனைக்கு சில நபிமொழிகள்

1) உங்களில் ஒருவர் தமக்கு விரும்புவதையே தம் சகோதரனுக்கும் விரும்பாதவரை (முழுமையான) ஈமான் கொண்டவராக மாட்டார் என பெருமானார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் : அனஸ் (ரழியல்லாஹு அன்ஹு)
(ஆதாரம் : புஹாரி )

2) ஒரு கட்டிடத்தின் பகுதி இன்னொரு பகுதியை எப்படி வலுப்படுத்திகொண்டிருக்கிறதோ அது போலவே ஒரு முஃமின் இன்னொரு முஃமின் விஷயத்தில் நடந்து கொள்ள வெண்டும். எனபெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்கள் விரல்களை கோர்த்துக் காட்டினார்கள்.
அறிவிப்பவர் : அபூ மூஸா (ரழியல்லாஹு அன்ஹு)

(ஆதாரம் : புஹாரி 481)

3) ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமின் சகோதரனாவான். அவனுக்குஅவன் அநீதியிழைக்கவுமாட்டான், அவனை (பிறரது அநீதிக்கு ஆளாகும் படி) கை விட்டு வடவும்மாட்டான். எவர் தன் சகோதரனின் தேவையை நிறைவு செய்வதில் ஈடுபடுகிறாரோ அவரது தேவையைநிறைவு செய்வதில் அல்லாஹ் ஈடுபடுகிறான். எவர் ஒரு முஸ்லிமின் துன்பத்தைநீக்குகிறாரோ அவரை விட்டு அல்லாஹ்வும் மறுமை நாளின் துன்பங்களில் ஒரு துன்பத்தைநீக்குகிறான். எவர் ஒரு முஸ்லிமின் குறைகளை மறைக்கின்றாரோ அவரது குறைகளை மறுமைநாளில் அல்லாஹ்வும் மறைக்கின்றான் எனபெருமானார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் : அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழியல்லாஹு அன்ஹு)
(ஆதாரம் : புஹாரி 2442)

4) உன் சகோதரன் அக்கிரமக்காரனாக இருக்கும் நிலையிலும்அக்கிரமத்திற்கு உள்ளானவனாக இருக்கும் நிலையிலும் அவனக்கு உதவி செய் எனபெருமானார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். அதற்கு மக்கள் அல்லாஹ்வின் தூதரே! அக்கிரமத்திற்கு உள்ளானவருக்கு நாங்கள் உதவி செய்வோம் ஆனால் அக்கிரமக்காரனுக்குஎப்படி உதவி செய்வோம்? என்று கேட்டனர். அதற்கு பெருமானார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனை அக்கிரமம் செய்யவிடாமல் தடுத்து விடுங்கள் இதுவே நீங்கள் அவனுக்கு செய்யும் உதவி என்று கூறினார்கள். அறிவிப்பவர் : அனஸ் (ரழியல்லாஹு அன்ஹு)
(ஆதாரம் : புஹாரி 2444)

5) ஒருவருக்கொருவர் கருணை புரிவதிலும், அன்பு செலுத்துவதிலும், இரக்கம் காட்டுவதிலும், (உண்மையான) இறை நம்பிக்கையாளர்களை ஓர் உடலைப் போன்று நீ காண்பாய். உடலின் ஓர் உறுப்பு சுகவீனமடைந்தால் அதனுடன் மற்ற உறுப்புகளும் (சேர்ந்து கொண்டு) உறங்காமல் விழித்தக்கொண்டிருக்கின்றன அத்துடன் உடல் முழுவதும் காய்ச்சல் கண்டு விடுகிறது எனபெருமானார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் : நுஃமான் பின் பஷீர் (ரழியல்லாஹு அன்ஹு)
(ஆதாரம் : புஹாரி 4011)

6) ஒருவருக்கொருவர் கோபம் கொள்ளாதீர்கள்; பிணங்கிக்கொள்ளாதீர்கள், (மாறாக) அல்லாஹ்வின் அடியார்களே! (அன்பு பாராட்டுவதில்) சகோதரர்களாய் இருங்கள். எந்த ஒருமுஸ்லிமும் தம் சகோதரனுடன் மூன்று நாட்களுக்கு மேல் பேசாமல் இருப்பது அனுமதிக்கப்பட்டதன்று என பெருமானார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் (ரழியல்லாஹு அன்ஹு)

(ஆதாரம் : புஹாரி 4045)

7) மக்களை அதிகமாக சுவர்க்கத்தில் புகுத்துபவை இறையச்சமும் நற்குணமும்தான் என்று பெருமானார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு)

(ஆதாரம் : திர்மிதீ, ஹாகிம்)

8) இறைநம்பிக்கையாளன் குத்திப் பேசுபவனாகவும் அடிக்கடி சாபமிடுபவனாகவும் இருப்பது இல்லை. மானங்கெட்ட செயல்புரிபவனாகவும், சண்டையில் தீய வார்த்தைகள் பேசுபவனாகவும் இருப்பதில்லை என்று பெருமானார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் : அபூதர்தா (ரழியல்லாஹு அன்ஹு)

(ஆதாரம் : ஹாகிம்)

9) வெட்கம் இறைநம்பிக்கையின் ஒரு பகுதியாகும் என்றுபெருமானார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் : இப்னு உமர் (ரழியல்லாஹு அன்ஹு)

(ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

10) ஒருவர் மற்றவர்மீது அக்கிரமம் புரியாமல், ஒருவர் மற்றவர் மீது பெருமை கொள்ளாமல் பணிந்தவர்களாக இருங்கள் என்று எனக்கு வஹி (இறைசெய்தி) அறிவிக்கப்பட்டுள்ளது என்றுபெருமானார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : இயான் இப்னு ஹிமார்(ரழியல்லாஹு அன்ஹு)

(ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

11) எவர் தன்னுடைய சகோதரனுடைய மானத்தை அவனறியாமலேயே காக்கிறாரோ அல்லாஹ்அவருடைய முகத்தை மறுமையில் நெருப்பிலிருந்து காக்கிறான் என்றுபெருமானார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூ தர்தா(ரழியல்லாஹு அன்ஹு)

(ஆதாரம் : திர்மிதி)

12) மக்களே! ஸலாமைப் பரப்புங்கள்! உறவினரோடு சேர்ந்து வாழுங்கள்! உணவளியுங்கள்! மேலும் இரவில் மக்கள் தூங்கும் போது நீங்கள் (எழுந்து) தொழுங்கள் அப்போது நீங்கள் சுவர்க்கத்தில் அமைதியுடன் நுழையலாம் என்று பெருமானார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அப்துல்லாஹ்; இப்னு ஸலாம்; (ரழியல்லாஹு அன்ஹு)

(ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

13) ”நயவஞ்சகனுடைய அடையாளங்கள் மூன்று. (1)அவன் பேசினால் பொய்யே பேசுவான். (2)அவன் வாக்குறுதி கொடுத்தால் மாறு செய்வான். (3)அவனிடம் ஒரு பொருள் அல்லது பணி தொடர்பான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டால் அதில் மோசடி செய்வான்” என்று பெருமானார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்கூறினார்கள்.
அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு)

(ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

14) பகைமை கொள்பவர்களும், தீயவர்களும் (தான்) அல்லாஹ்விடத்தில் கெட்டவர்கள் என்றுபெருமானார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் : அபுதர்தா (ரழியல்லாஹு அன்ஹு)
(ஆதாரம் : திர்மிதி)

15) கடுமையாகச் சண்டையிடுபவன், மனதில் பகைமையை வைத்திருப்பவன் அல்லாஹ்விடம்மிகவும் வெறுப்புக்குரியவன் ஆவான் என்று பெருமானார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் : அன்னை ஆயிஷா (ரழியல்லாஹு அன்ஹா)
(ஆதாரம் : முஸ்லிம்)

16) பொறாமை கொள்ளாதிருக்கும்படி உங்களை எச்சரிக்கிறேன். ஏனெனில் நெருப்பு விறகைத் தின்றுவிடுவதைப் போன்று பொறாமை நற்செயல்களைத் தின்று விடும் என்றுபெருமானார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு)

(ஆதாரம் : அபூதாவூத்)

17) நான் உங்களை சந்தேகப்பட வேண்டாமென்று எச்சரிக்கின்றேன். ஏனெனில் செய்திகளில் மிகவும்பொய்யானது சந்தேகமேயாகும் என்றுபெருமானார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு)

(ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

18) எவன் ஒரு முஸ்லிமுக்கு தீங்கு இழைக்கின்றானோ, அல்லாஹ் அவனுக்கு தீங்கிழைப்பான். எவன் ஒருமுஸ்லிமை கஷ்டத்தில் ஆழ்த்துகிறானோ, அல்லாஹ் அவனை கஷ்டத்தில் ஆழ்த்துவான் என்று பெருமானார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் : அபூஸிர்மா (ரழியல்லாஹு அன்ஹு)

(ஆதாரம் : அபூதாவூத், திர்மிதீ )

19) செயல்களில் சிறந்தது தொழுகையை அதன் நேரத்தில் தொழுவதாகும் என்று பெருமானார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் : இப்னு மஸ்வூத் (ரழியல்லாஹு அன்ஹு)

(ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

20) நமக்கும் அவர்களுக்குமிடையே (காபிர்களுக்கு மிடையே) இறைவன் ஏற்படுத்தியவித்தியாசம் தொழுகையுமாகும்கும். யார் அதனை மறுத்து விட்டாரோ அவர் காஃபிராகி விட்டார்என்று பெருமானார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் : புரைதா (ரழியல்லாஹு அன்ஹு)

(ஆதாரம் : திர்மிதி, அபூதாவுத், அஹ்மது,இப்னுமாஜா, நஸயீ, இப்னு ஹிப்பான்)

21) இரண்டு தொழுகைகள் முனாஃபிக்கீன்களுக்கு பாரமாக இருக்கிறது. ஃபஜ்ருடைய ஜமாஅத்தும், இஷாவுடையஜாமாஅத்தும். இந்த இரண்டிலும் உள்ள நன்மைகளை அவர்கள் அறிவார்களேயானால், பள்ளிக்கு தவழ்ந்து வந்தாயினும் தொழுகையில் கலந்து விடுவர் என்றுபெருமானார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள்.
அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு)

(ஆதாரம் : புஹாரி, முஸ்லிம், முஅத்தா, அபூதாவூத், திர்மிதீ, நஸயி )

22) தொழுகையில் இமாமுக்கு மறதி ஏற்படும்போதுஆண்கள் ”ஸுப்ஹானல்லாஹ்” என்று கூறவேண்டும்,பெண்கள் கையைத் தட்ட வேண்டும் என்று பெருமானார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு).

(ஆதாரம் : புஹாரி, முஸ்லிம்)

‘உங்கள் இறைவன் மீது நம்பிக்கை கொள்ளுங்கள் என்று ஈமானின் பக்கம் அழைத்தவரின் அழைப்பைச் செவிமடுத்து நாங்கள் திடமாக ஈமான் கொண்டோம் எங்கள் இறைவனே! எங்கள் பாவங்களை மன்னிப்பாயாக! எங்கள் தீமைகளை எங்களை விட்டும் அகற்றி விடுவாயாக இன்னும், எங்களுடைய ஆன்மாக்களைச் சான்றோர்களுடைய ஆன்மாக்களுடன் கைப்பற்றுவாயாக!

(ஸூரத்து ஆல இம்றான் 193)

www.bathusha.com
Tamil Islamic Online Radio 24h

**உண்மையும் நன்மையும் உன்னிலும் என்னிலும் உண்டாகட்டும்**

**AL ALIM S.A.M.SEYED JAHAN MOWLANA HUSAINY JALALIY**
**BATHUSHA.COM**